1973 நவம்பர் 29]

அழகர் அணைத் திட்டம்

* 486. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், அழகர் அணைக்கட்டுத் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) திட்டத்திற்கான விரிவான வரைபடங்களும், மதிப்பீடும், திருச்சிராப்பள்ளி ஆய்வக வட்டம் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த அழகர் அணைத் திட்டத்தால் ஏராளமான எக்கர் பாசனவசதி பெறும் வாய்ப்பினைப் பெறும். இது நீண்ட காலமாக பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதை விரைவுபடுத்தவும், இதை நிறைவேற்றவும் எவ்வளவு செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்காகக்கூடிய செலவு, உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது 796 லட்சம் ரூபாய். ஆனால் இதைப் பொருளாதார அடிப்படையில் பார்க்கும்போது, உணவு உற்பத்தியை கணக்கில் வைத்துப் பார்க்கும்போது லாபகரமாக இல்லை. இருந்தாலும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை அரசுக்குக் கிடைத்த பிறகு முடிவு எடுக்கப்படும்.